# 1 தெசலோனிக்கேயர்

## தெசலோனிக்கே நகரம்

1. இந்த நகரம் 350 B.Cயில் கஸான்ட்ராவால் நிறுவப்பட்டு, தன் மனைவி பெயரையே இதற்கு வைத்தான். நகரின் தற்போதைய பெயர் சலோனிகா.
2. பவுலின் நாட்களில் நகரத்தின் மக்கள் தொகை இரண்டு லட்சமாக இருந்தது.
3. இது ஐரோப்பாவில் நற்செய்தி கேட்ட இரண்டாவது நகரம் (முதல் நகரம் பிலிப்பி).
4. B.C 146ல் மக்கதோனியாவை, ரோமாபுரி மாகாணத்தின் ஒரு மாகாணமாக ஏற்படுத்தினபோது தெசலோனிக்கேயா அதற்கு தலைநகராக இருந்தது.
5. ஆசியாவின் 2வது மிகச் சிறந்த நகரமாக சீக்கிரத்தில் வளர்ச்சி பெற்ற நகரமாகும்.
6. ஒரு சுதந்திர நகரமாக இருந்து, அந்த பட்டணத்திற்கு என்று உள்ள அதிகாரிகளால் ஆளப்பட்டது (அப் 17:6)
7. இந்த நகரம் ரோமானிய பேரரசரின் மடியில் இருக்கும் நகரம் என்று அழைக்கப்பட்டது. காரணம் இத்தாலியில் இருந்து கிழக்கு நோக்கி வடக்கு இராணுவ நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது
8. இது சிறந்த வர்த்தக மையமாகவும், இராணுவ மையமாகவும் இருந்தது மற்றும் ஒரு பிரபலமான துறைமுகமும் இருந்தது .
9. நல்ல வணிகத்தின் மூலமாக இந்த நகரமானது நல்ல செழிப்புடனும், வசதியுடனும் காணப்பட்டது. நகரின் வர்த்தகமானது நகரத்திற்குள் நல்ல எண்ணிக்கையுள்ள பல யூதர்களை ஈர்த்தது, அதன் விளைவாக நகரத்தில் செயலில் உள்ள ஒரு ஜெப ஆலயம் இருந்தது.

## தெசலோனிக்கேயில் பவுலின் ஊழியம்

- இந்த சபையானது பவுலின் இரண்டாவது மிஷனரி பயணத்தின்போது பவுல் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. அவர் பிலிப்பிலிருந்து தெசலோனிக்கேயாவுக்கு வந்து, (அப் 17: 1) ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார். மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்தான். இதன் விளைவாக அநேக யூதர்கள், பக்தியுள்ள கிரேக்கரில் திரளான ஜனங்களும், கனம்பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்தனர் (அப் 17: 4). அந்த மூன்று வாரங்களில், புறமத விக்கிரக வணக்கத்தாரும் பெருமளவில் மாற்றப்பட்டனர் (1 தெச 1: 9)
- இந்த சமயத்தில் பவுல் சில எதிர்ப்பை சந்தித்தார் (அப் 17: 5–10). ஆகவே உடனடியாக அவர்கள் வெளியேற வேண்டியதாய் இருந்தது. ஆனால் ஏற்கெனவே தெசலோனிக்கேயில் சபை நிறுவப்பட்டிருந்தது. தெசலோனிக்கேயிலிருந்து சில முக்கிய நபர்கள் பின்னர் பவுலுடன் ஊழியத்தில் சம்பந்தப்பட்டிருந்தனர்.
  - தேமா (2 தீமோ 4:10), செக்குந்து (அப் 20: 4) காயு (அப் 19:29); அரிஸ்தர்க்கு (அப் 19: 29; 27: 2).

## எழுத்தாளர்

1. பவுல் தன்னை எழுத்தாளராக குறிப்பிடுகிறார் (1:1; 2:18)
2. இந்த புத்தகத்தின் வரலாற்று நிகழ்வு பவுலின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகளுடன் பொருந்துகிறது.
   - பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது அவருடன் தெசலோனிக்கே பட்டணத்தில் ஊழியம் செய்துவந்த பவுலின் உடன் வேலையாட்களான சில்வானும், தீமோத்தேயுவும் உடன் இருக்கிறதை காணலாம் (1:1; அப் 17:4)
3. ஆசிரியரின் புவியியல் சார்ந்த இயக்கங்கள் அப்போஸ்தலனாகிய பவுலின் பதிவுசெய்யப்பட்ட பயணத்திற்கு ஒப்பாக இருக்கிறது (அப் 16–18 அதி).
   - பிலிப்பி – தெசலோனிக்கே (2:2)
   - தெசலோனிக்கே – அத்தனே (3:1)
   - அத்தனே – கொரிந்து (3:6)
4. வழக்கமான பவுலின் எழுத்து நடை இந்த புத்தகத்தில் காணப்படுகிறது. வாழ்த்துரை, உபதேசம், நடைமுறை மற்றும் தனிப்பட்ட வாழ்த்துகளுடன் முடித்தல்.

## எழுதப்பட்ட காலம்

இந்த புத்தகம் பொதுவாக A.D 51 ல் எழுதப்பட்டிருக்கலாம். காரணம் கல்லியோன் என்பவன் அகாயா நாட்டிற்கு A.D 51–52ல் அதிபதியானதாக, கிரேக்க தேசத்திலுள்ள 'டெல்பி' என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. இந்த நேரத்தில்தான் பவுல் அங்கே இருந்திருக்கிறான் (அப் 18: 12–17).

## எழுதப்பட்டதின் பின்னணி

- பவுல் தெசலோனிக்கேயரை ஊக்குவிப்பதற்காகவும், சபையை பலப்படுத்தவும் தீமோத்தேயுவை அனுப்பினார். தீமோத்தேயு தெசலோனிக்கேயரை பற்றி சொன்ன காரியங்கள்தான் பவுல் இந்த நிருபத்தை எழுதுவதற்கு அவரை தூண்டியது (3: 6).

  தீமோத்தேயுவின் அறிக்கை

  - நித்திரையடைந்தவர்களினிமித்தம் உண்டான கவலை (4:13)
  - பவுலை குறித்ததான சில தவறான குற்றச்சாட்டுகள் (அதி 2)
  - மற்றும் பலர் கிறிஸ்துவின் வருகை சமீபமாய் இருக்கிறது என்று வேலை செய்யாமல் சோம்பேறியாய் வாழ்ந்தனர் (4:12; 2 தெச 3:10–12).
  - ஒழுக்கக்கேட்டில் ஆபத்து இருந்தது (4: 1–3).

மையக்கரு: கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

கரு வசனம்: உண்மையான மாற்றத்தின் மூன்று அடையாளங்கள் (1 : 9,10)

- தேவனிடத்திற்கு மனந்திரும்புதல்
- தேவனுக்கு ஊழியஞ்செய்தல்
- தேவனுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருத்தல்

## எழுதப்பட்டதின் நோக்கம்

1. உபத்திரவங்களின் மத்தியிலும் முன்மாதிரியான வாழ்க்கை வாழும்படி கட்டளையாக எழுதப்பட்டது (1 : 1–10)
2. பவுல் இல்லாததின் காரணமாக, எழும்பின குற்றசாட்டுக்கு எதிர்த்து நிற்கும்படியாக எழுதப்பட்டது (2: 1–16)
3. தீமோத்தேயு அவர்களை சந்திக்க வருவதின் காரணத்தை விளக்குவதற்கு எழுதப்பட்டது (3 : 1–13).
4. கிறிஸ்தவ ஒழுக்கத்தின் மேன்மையைக் குறித்து அவர்களுக்குக் கற்பிக்க எழுதப்பட்டது (4: 1–12).
5. இயேசு கிறிஸ்துவின் 2 வது வருகை பற்றிய தவறான கருத்துகளை திருத்தும்படி எழுதப்பட்டது (4 : 13–.5அதி).

## புஸ்தகத்தின் வரையறை

- மாதிரியுள்ள சபை (அதி 1)
- மாதிரியுள்ள ஊழியன் (அதி 2)
- மாதிரியுள்ள வாழ்க்கை(அதி 3)
- மாதிரியுள்ள விசுவாசம்(அதி 4)
- மாதிரியுள்ள நடக்கை (அதி 5)

# விளக்கவுரை

## வாழ்த்துரை (1:1)

- இந்த கடிதத்தை பவுல் கொரிந்துவில் இருந்து எழுதியபோது தீமோத்தேயுவும், சீலாவும் தெசலோனிக்கேயில் இருந்து கொரிந்து பட்டணத்திற்கு பவுலிடமாய் திரும்பி வருகிறார்கள். தெசலோனியர்கள் பவுல், தீமோத்தேயு, சீலா ஆகிய மூன்று பேரையும் தனிப்பட்ட முறையில் நன்கு அறிந்திருந்தனர். பவுல் தனது வாழ்த்துரையில் தன்னையும், தன்னுடைய தோழர்களையும் அடையாளம் காட்டுகிறார். இந்த நிருபத்தை எழுதியபோது, சீலாவும் தீமோத்தேயும் பவுலுடன் இருந்தார்கள்.
- 'சில்வானு' என்பது சீலா என்பதற்கான ரோம பெயர் ஆகும். பவுல், சில்வானு என்றும், லூக்கா "சீலா" என்றும் பயன்படுத்தினார்கள் (அப் 15:22). 1 பேதுரு 5:12 ல் குறிப்பிடப்பட்டுள்ள 'சில்வானு' என்பதுவும் இவராக இருக்கலாம்.
- சீலாவை விட தீமோத்தேயுவின் பின்னணியைப் பற்றி நாம் இன்னும் அதிகம் அறியலாம். தீமோத்தேயு லீஸ்திரா பட்டணத்தைச் சேர்ந்தவன். அவன் தாய் விசுவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன். பவுலின் முதல் மிஷனரி பயணத்தின் போது, பவுலின் மூலமாக தீமோத்தேயு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கவேண்டும், காரணம் ஏற்கனவே தீமோத்தேயு சீஷனாக இருந்தான் என்றும், நற்சாட்சி பெற்றவனாயிருந்தான் என்றும் கடந்த கால சொற்சொடரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது (1 தீமோ 1: 2; அப் 14:6,7; 16:1,2).
- பவுல் இயேசு கிறிஸ்துவை "ஆண்டவரே" என்று அழைப்பதன் மூலம் இயேசுவை பிதாவாகிய தேவனுக்கு ஒப்பிட்டு பேசுகிறார்.

- "கிருபை" என்பது கிரேக்க வார்த்தையில் சொல்லப்படும் ஒரு பொதுவான வணக்கம் ஆகும். அதின் அர்த்தம் "வாழ்த்து" அல்லது "மகிழ்ச்சி" என்பதாகும்.
- "சமாதானம்" என்கிற கிரேக்க வார்த்தையானது எபிரெய மொழியில் சொல்லப்படும் "ஷாலோம்" என்ற வார்த்தைக்கு சமமான வார்த்தையாகும். அதின் பொதுவான அர்த்தம் 'ஆதரவு, நல்வாழ்வு, மற்றும் செழிப்பு' என்பதாகும். ஆனால் ஆவிக்குரிய காரியங்களில் 'செழிப்பு' என்பதை குறிக்கிறது.
- தேவனுடைய கிருபையே நம்மை சமாதானத்திற்கு நேராக நடத்துகிறது. பவுல் தன்னுடைய நிருபங்களை எழுதும்போது 'கிருபை மற்றும் சமாதானம்' ஆகிய இந்த இரண்டு வார்த்தைகளை குறிப்பிடுவதை காணலாம்.

<u>தெசலோனிக்கேயர்களுக்காக நன்றி செலுத்துதல் (1:2–10)</u>

- நற்செய்திக்கு தெசலோனிக்கேயர் செவிகொடுத்ததிற்கும், விசுவாசத்தில் அவர்கள் தொடர்ந்து இருப்பதையும் கண்டு அவர்களை குறித்து பவுல் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறார்.
- உபத்திரவங்களின் மத்தியிலும் தெசலோனிக்கேயர் தங்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று அவர்களின் இரட்சிப்பை குறித்ததான பல அம்சங்களை மறுபரிசீலனை செய்வதன் மூலம் பவுல் தனது நிருபத்தின் முதல் பகுதியைத் தொடங்குகிறார்.

<u>வச.2 – தேவனுக்குப் பிரியமான சகோதரரே</u> – பவுல், தெசலோனிக்கேயரை "சகோதரர்கள்" என குறிப்பிடுகிறார் அப்படியென்றால் சகோதரிகள் அங்கு இல்லை என்றோ அல்லது சகோதரிகளுக்கு முக்கியத்துவம் இல்லை என்றோ பொருள் இல்லை. தேவனுடைய குடும்பத்தில் யூதன் என்றோ புறஜாதி என்றோ இல்லாமல் அனைவரும் சமம் என்பதை குறிப்பதற்கே "சகோதரர்கள்" என்ற பதத்தை பயன்படுத்துகிறார். அவர் இந்த நிருபத்தில் 15 முறையும், 2 தெசலோனிக்கேயரில் ஏழு முறையும்.அதைப் பயன்படுத்தியுள்ளார்.

<u>வச.3 –தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்</u> – தேவன் தெசலோனிக்கேயர் விசுவாசிகளைத் இரட்சிப்புக்காக தேர்ந்தெடுத்ததற்காக பவுல் தேவனுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

- தெசலோனிக்கேயர் நற்செய்திக்கு செவிகொடுத்தலே, அவர்கள் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதற்கான சான்றாகும்.
    - ❖ அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் (மத் 22:14) அந்த வரிசையில் தெசலோனிக்கேயரும், நாமும் இருப்பது பாக்கியமான ஒன்றாகும்.
    - ❖ நாம் அவரை தெரிந்துகொள்ளவில்லை, அவர் நம்மை தெரிந்துகொண்டார் (யோவான் 15:16).
- ➢ உலகம் நலமானதை தெரிந்துகொள்ளும் ஆனால் கர்த்தருடைய தெரிந்தெடுப்போ வித்தியாசமானது.
    - ❖ தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளை, பலவீனமானவைகளை, இழிவானவைகளை, அற்பமாயெண்ணப்பட்டவைகளை, இல்லாதவைகளையும் தெரிந்துகொண்டார் (1 கொரி 1:27,28)
    - ❖ பரதேசியை தெரிந்துகொண்டார் (1 பேதுரு 1:2)

<u>வச.2 – தெசலோனிக்கேயரின் மூன்று குணாதிசயங்களைக் குறித்து பவுல் இங்கு குறிப்பிடுகிறார்.</u>

- முதலாவதாக, அவர்கள் கிறிஸ்துவினிடத்திற்கு "விசுவாசத்தில்" திரும்பினர்.
- இரண்டாவது, அவர்கள் கிறிஸ்துவை "அன்பினால்" சேவித்தார்கள்.
- மூன்றாவது, அவர்கள் எதிர்கால "நம்பிக்கை" யின் மூலம் உபத்திரவத்திலும் பொறுமையாய் இருந்தனர்.
    - ❖ விசுவாசத்தின் கிரியை – இது அவர்களுடைய கடந்த காலம்
    - ❖ அன்பின் பிரயாசம் – இது அவர்களுடைய நிகழ் காலம்
    - ❖ நம்பிக்கையின் பொறுமை – இது அவர்களுடைய எதிர் காலம்

<u>இந்த குணாதிசயங்களை வசனம் 9,10 ஆகிய வசனங்களோடு ஒப்பிடுவோம்.</u>

- விசுவாசத்தின் கிரியை – விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினார்கள்.
- அன்பின் பிரயாசம் – ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்தார்கள்.
- நம்பிக்கையின் பொறுமை – குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

<u>இந்த மூன்று குணாதிசயங்களும் (விசுவாசம், அன்பு, நம்பிக்கை) நமது கிறிஸ்தவ வாழ்வில் பெரும் பங்கு வகிக்கிறது.</u>

- ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் விசுவாசமானது கிரியையில் காணப்படவேண்டும்
    - ❖ கலா 5: 6 – அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும்.

- ❖ யாக்கோபு 2:17 – விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.

- அன்பை நமது பிரயாசத்தின் மூலம் வெளிப்படுத்தவேண்டும். எபேசு சபையில் ஆரம்பத்தில் காணப்பட்ட பிரயாசங்கள் பின்நாளில் இல்லாமல் போனதற்கு காரணம் அவர்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்டார்கள் என ஆண்டவர் அவர்கள் மீது வருத்தப்படுவதை காணலாம் (வெளி 2:2–4).
- .நம்பிக்கையானது எதையும் சகித்துக்கொள்ளும்
  - ❖ ரோமர் 8:24, 25 – காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்.

வச.5 – பவுல் தன்னுடைய நயவசனிப்பினாலே அவர்களை கர்த்தரிடமாய் இழுக்கவில்லை, யூதனோ அல்லது கிரேக்கனோ, விசுவாசிக்கிறவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு நற்செய்தியானது தேவபெலனாயிருக்கிறது (ரோமர் 1:16). யார் விசுவாசிப்பார்கள்?

- ❖ நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள் (அப் 13:48).

ஆனாலும் பிரசங்கியின் வாழ்க்கைமுறை மிகவும் அவசியம். நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள்நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே (1:5) என பவுல் கூறுகிறார். நமது வாழ்க்கை சரியில்லையேல் நமது பிரசங்கம் வீணாயிருக்கும்.

<u>தீத்துக்கு எழுதின நிருபத்திலும் இந்த மூன்று பரிமாணங்களை காணலாம் (தீத்து 2:12–13).</u>

- விசுவாசத்தின் கிரியை – நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து,
- அன்பின் பிரயாசம் – தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி,
- நம்பிக்கையின் பொறுமை – நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

<u>பிரிந்து வாழுவதை குறித்து இந்த நிருபம் போதிப்பது:</u>

- 1 தெச 4:11 – புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு வாழவேண்டும்
- 1 தெச 5:5 – நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே.
- 1 தெச 1:9 – விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு திரும்பினார்கள்.
- 1 தெச 4:3 – வேசிமார்க்கத்துக்கு விலகியிருக்கவேண்டும்
- 1 தெச 4:13 – நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.

<u>வச. 6,7 – பவுல் தெசலோனிக்கேயரை குறித்து நன்றியுடன் இருந்தார்</u>. காரணம்... பவுல் அவர்களுடனே செய்த ஊழியத்தின் பலனை அவர்கள் பிரதிபலித்தனர். எப்படியெனில்...

1. அவிசுவாசமான யூதர்களிடமிருந்தும், புறஜாதிகளிடமிருந்தும் அவர்களுக்கு உபத்திரவம் வந்திருந்தாலும், அவர்கள் சுவிசேஷ செய்தியை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டனர்.
   - ➢ உபத்திரவம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு அனுபவம் ஆகும்.
     - ❖ உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு (யோவான் 16:33) என இயேசு கிறிஸ்து கூறியுள்ளார்
     - ❖ நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும் (அப் 14:22) என சீஷர்கள் அறிவித்து அந்தியோகியா சபையை உற்சாகப்படுத்தினர்.
     - ❖ மட்டுமல்ல அது அவர்களின் அனுபவமாகவும் இருந்தது (அப் 5:41 – அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷப்பட்டார்கள்)
   - ➢ உபத்திரவத்தின் மத்தியிலும் சந்தோஷம் இருந்தது... அது பாவம் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்ற சந்தோஷமே.
   - ➢ இரட்சிப்பின் வசனத்தை கேட்டதும் ஏற்படுகிற சந்தோஷத்தை வேதத்திலே அநேக உதாரணங்களில் காணலாம்.
     - ❖ சமாரியாவிலே உள்ள ஒரு பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று (அப் 8:8)

- ❖ கந்தாகே என்பவளுக்கு மந்திரி (எத்தியோப்பியன்) இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்ற பின் சந்தோஷத்தோடே தன் வழியே போனான் (அப் 8:39)
- ❖ சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்பட்டு தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான் (அப் 16:34).

2. .தெசலோனிக்கேயர் பவுலையும், கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களானார்கள்.
   - ➢ அநேக சந்தர்ப்பங்களில் என்னை (மனிதனை) பின்பற்றாமல், கிறிஸ்துவை பின்பற்றுங்கள் என்று சொல்லுகிறோம். ஆனால் இங்கு தெசலோனிக்கேயர் பவுலை பின்பற்றினர். காரணம் பவுலின் மாதிரியுள்ள வாழ்க்கை. (1:5–நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள்நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே)
     - ❖ மேலும் பவுல் கொரிந்தியரிடம்,"நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று சவால் விட்டு சொல்லுகிறார் (1 கொரி 11:1).
3. மக்கெதோனியாவிலும், அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானார்கள்.
   - ➢ தேவனைப்பற்றின .தெசலோனிக்கேயரின் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று. பவுலும் அவரது உடன் ஊழியர்களும் கிறிஸ்துவை குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாய அவசியம் இல்லை. தெசலோனிக்கேயா சபையானது நல்ல ஒரு ஊழியம் செய்யக்கூடிய சபையாக இருந்தது. வெகு சீக்கிரத்தில் அவர்களோ அல்லது அவர்கள் மூலம் அனுப்பப்பட்டவர்களோ இந்த நற்செய்தியை அறிவித்திருக்கக்கூடும்.
   - ➢ அவர்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் (நற்செய்தி) மக்கெதோனியாவிலும், தெற்கு நோக்கி அகாயாவிலும் தொனித்தது (7,8).
   - ➢ மற்றும் தேவையுள்ள மற்ற கிறிஸ்தவர்களுக்கு தாராளமாக கொடுக்கும் மனப்பாங்கும் அகாயா மட்டும் எட்டியது (2 கொரி 8: 1–8).
   - ➢ தேவனை குறித்து பிரசித்தம் பண்ணுவதில் நாம் எந்த அளவுக்கு உள்ளோம்.
     - ❖ கிறிஸ்து குணமாக்கப்பட்ட லேகியோனிடம், "நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய், தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி என்று சொல்லி, அவனை அனுப்பிவிட்டார். அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் பட்டணத்தில் எங்கும் பிரசித்தப்படுத்தினான்" (லூக்கா 8:39).

<u>பவுல் தெசலோனிக்கேயருக்கு சுவிசேஷம் அறிவித்த விதம் (2:1–12)</u>

பவுலின் ஊழியத்தை குறித்து தெசலோனிக்கேயர் மத்தியில் சில கேள்விகள் எழுந்திருந்திருக்கலாம். அதுவே பவுலுக்கு விரோதமாய் செயல்படுவதற்கு ஏதுவாக இருந்திருக்கலாம். ஆகவே அவர்களுக்கு தன்னுடைய ஊழியத்தின் ஆரம்ப நிலையை தெளிவான முறையில் விளக்கி எழுதுகிறார்.

- கலாத்தியர் 1:12 – இதை மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை. கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.
- கலாத்தியர் 1:16,17 – கிறிஸ்துவை புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்க தேவன் வெளிப்படுத்தின போது, அவர் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணாமல் அப்போஸ்தலர்களிடத்தில் போய் ஆலோசனை கேளாமல் அரபி தேசத்துக்குப் போய் தேவனோடு நேரத்தை செலவு செய்து திரும்பவும் தமஸ்குவுக்கு வந்து தேவனுடைய வார்த்தையை சுவிசேஷமாய் அறிவித்தார்.

2:1,2 – பவுல் தெசலோனிக்கேயரிடம், "நான் அறிவித்த சுவிசேஷம் உங்களுக்கு பலனை கொண்டுவந்தது" என்று கூறுகிறார். ஆனால் கலாத்தியா நாட்டு சபைகளுக்கு எழுதும்போது பட்ட பாடுகள் எல்லாம் வீணாகிப் போயிற்று என்று எழுதுகிறார் (கலா 3:4). பவுலின் செய்தி பொதுவாக ஜனங்களின் மத்தியில் தவறாக கருதப்பட்டாலும் (அப் 17:7) தொடர்ந்து சுவிசேஷம் அறிவித்து வந்தார்.

தெசலோனிக்கே பட்டணத்தில் சுவிசேஷம் அறிவிப்பதற்கு முன்பாக பிலிப்பு பட்டணத்தில் வெகு பாடுபட்டதாக குறிப்பிடுகிறார், அதே பாடும் உபத்திரவமும் தெசலோனிக்கே பட்டணத்திலும் இருந்ததாக கூறுகிறார் (அப் 17: 5–10).

- ➢ ஒரு ஊழியன் எப்படிப்பட்ட சூழ்நிலைகள் மத்தியிலும், கஷ்டங்கள் மத்தியிலும் வேதவசனத்தை கொண்டு வருகிறார் என்பதை விசுவாசிகள் அறிந்துகொள்ள வேண்டும் (2:2,9).

2:3,4– பவுல் தன்னுடைய செய்தி உண்மை என்பதையும், அவருடைய நோக்கம் சரியானதாகவும், அவர் சுவிசேஷம் அறிவிக்கும் முறை நேர்மையானதாகவும் இருப்பதாக கூறுகிறார்.

- மனுஷன் அங்கீகரிக்க வேண்டும் என்று அவருடைய பிரசங்கம் இருந்ததில்லை (2:4).
- அவருடைய பிரசங்கத்தின் மூலமாக சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமும் அவரிடத்திலே இருந்ததில்லை (2:5). ஊழியன் விசுவாசிகளிடம் ஏதாவது பெற்றுக்கொள்ள தான் செயல்படுகிறார் என நினைக்கக் கூடாது (2:5)
- பவுல் பணத்தை எதிர்பார்த்து ஊழியத்தை செய்யவில்லை ஆனால் விசுவாசிகளும் அதற்காக பணம் கொடுக்காமல் இருக்ககூடாது. திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன் (கலாத்தியர் 6:6)

அநேகர் அப்போஸ்தலனாகிய பவுல் பணத்திற்காகத்தான் இந்த ஊழியத்தை செய்கிறார் என்ற தவறான எண்ணத்தை தெசலோனிக்கேயர் மத்தியில் சொல்லியிருக்கக் கூடும், ஆகவே தான் இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார். யூத போதகர்கள் திருவசனத்தை பிரசங்கித்ததற்காக பணத்தை பெற்றுக் கொள்வார்கள். இந்த வழிமுறையை சில இடங்களில் பின்பற்றி வந்தார்.

- 2 கொரி 11:7–11 – கொரிந்து சபைக்கு சுவிசேஷம் அறிவிக்கும் போது மற்ற சபைகளிடத்திலே சம்பளத்தை பெற்றுக் கொண்டு உங்களுக்கு இலவசமாய் அறிவித்தேன் என்று குறிப்பிடுகிறார்.
- பிலி 4:16 – பவுல் மக்கதோனியாவிலே சுவிசேஷம் அறிவிப்பதற்கு பிலிப்பு சபையார் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் உதவி செய்ததாக குறிப்பிடுகிறார்.

பவுல் 1 – 6 வரை எதிர்மறையாக பேசிக்கொண்டிருந்தாலும், 7 – 12 வரை நேர்மறையாகவும் பேசுகிறார்.

2:7–9 – <u>உங்களிடத்தில் பட்சமாய் நடந்துகொண்டோம்;</u> ஆங்கில வேதாகமத்தில் 'gentle' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது அதனுடைய அர்த்தம் 'மென்மையான' என்பதாகும். பொதுவாக இன்றைக்கு ஊழியர்கள் மென்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அது எல்லா சமயத்திலும் சாத்தியமல்ல இதே பவுல் அனேக இடத்திலே தவறு செய்யும்போது கடிந்து கொள்ளவும் செய்கிறார். அதே சமயத்தில் ஊழியனுக்கு பிரியமான நிலையிலே விசுவாசிகள் நடந்து கொள்ள வேண்டும் (2:8).

- பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறதுபோல, நாங்கள் உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்தோம். சில சமயங்களிலே தாயானவள் ஒத்துக்கொள்ளாத ஏதோ ஒரு ஆகாரத்தை அருந்தினால் அது பிள்ளையையும் பாதிக்கும் ஆகவே தாயானவள் சிறந்த உணவை உண்பது அவசியம். அதுபோல தவறான உபதேசத்தை போதிக்கும் போது அது விசுவாசிகளை பாதிக்கக் கூடியதாக இருக்கிறது ஆகவே ஒரு ஊழியன் அல்லது போதிக்கிறவன் சரியான (அ) ஆரோக்கியமான உபதேசத்தை போதிக்க வேண்டும், அது விசுவாசியின் வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும். சில நேரங்களிலே சம்பளத்திற்காக வேலை செய்யும் தாய்மார்கள் பிள்ளைகள் அழுதாலும் சரி தன்னுடைய நேரம் முடிந்த உடனே அவர்கள் வேலையை விட்டு சென்று விடுவார்கள் ஆனால் நான் அப்படி அல்ல இரவும் பகலும் உங்களுக்காக உண்மையான தாயைப்போல பாடுபட்டோம் என்று குறிப்பிடுகிறார்.
- பவுல் விசுவாசிகளுக்கு பாரமாய் இருக்கவில்லை, மாறாக தன்னையே அவர்களுக்காக கொடுக்க மனதாக இருந்ததாக சொல்லுகிறார் – இதுதான் பவுலின் ஊழியத்தினுடைய வெற்றியின் ரகசியம் ஆகும்.

2:10–12 – தெசலோனிக்கேயர் சாட்சியாக இருக்க வேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகிறார்.

- ➢ வச.7 – <u>தாயைப் போல நடந்து கொண்டோம்</u> – இது பவுல் அவர்களிடம் கொண்டுள்ள அன்பு கரிசனை அர்ப்பணிப்பு இவைகளை காட்டுகிறது.
- ➢ வச.11 – <u>தகப்பனைப் போல நடந்து கொண்டோம்</u> – இது பவுல் அவர்களை முதிர்ச்சியான நிலைக்கு ஆயத்தப்படுத்துதலை காட்டுகிறது.

பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேல் மக்களிடம் தகப்பனைப் போலவும், தாயைப்போலவும் இடைப்பதை நாம் காணலாம் (சங்கீதம் 103:13; ஏசாயா 66:13)

<u>பவுல் விசுவாசிகளோடு நடந்து கொண்ட முறை</u>

- பாடுகள் மத்தியிலும் பவுல் சுவிசேஷம் அறிவித்தார் (வச.2)
- பொருளாசையோடு சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை (வச.3,5)
- மனுஷரால் வரக்கூடிய மகிமையை தேடவில்லை (வச.6)

- விசுவாசிகளுக்காக ஜீவனையும் கொடுக்க தயாராக இருந்தார் (வச.8)
- மற்றவர்களுக்கு பாரமாக இராதபடிக்கு வேலை செய்து சுவிசேஷத்தை அறிவித்தார் (வச.9)
- விசுவாசிகளுக்கு முன்பாக குற்றமில்லாத சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்தார் (வச.10)
- விசுவாசிகளை பார்க்கவேண்டும் என்ற ஆவலோடு காணப்பட்டார் (வச.17)
- தகப்பனைப்போல, தாயைப்போல, சகோதரனைபோல மற்றும் செயல்பட்டார் (வச.7,12,17)

<u>தெசலோனிக்கேயர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட விதம் (2:13–16)</u>

பவுல் இரண்டாவது முறையாக தெசலோனிக்கேயருக்காக நன்றி செலுத்தி இந்த பகுதியை ஆரம்பிக்கிறார். மூன்று இடங்களில் பவுல் தெசலோனிக்கேயருக்காக நன்றி செலுத்துகிறார் (1:2–5; 2:13; 3:9–13). முதலாவது பவுல் தெசலோனிக்கேயர் தங்களுடைய வாழ்க்கையிலே நீதியின் கனிகளை எப்படி வெளிப்படுத்தினார்கள் என்பதற்கு நன்றி செலுத்துகிறார் (1:3). இப்பொழுது பவுல் அவர்களிடத்தில் சுவிசேஷம் அறிவித்தபோது அதை அவர்கள் எப்படி ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கு நன்றி செலுத்துகிறார்.

- ➢ ஒரு தாயைப் போலவும் தகப்பனை போலவும் செயல்பட்ட பவுல் இப்பொழுது <u>ஒரு சகோதரனாக அவர்களிடத்திலே பேசுகிறார்</u> (வச.14,17)

வச.14 – தெசலோனிக்கேயர் சபைகளை பின்பற்றுபவர்களாக காணப்பட்டார்கள். சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட பிற்பாடு அவர்கள் அனேக பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஒரு கிறிஸ்தவன் எப்பொழுது சுவிசேஷத்திற்கு கீழ் படிக்கிறானோ, அதற்குப் பிற்பாடு அவன் பாடுகளுக்கும் பங்கு உள்ளவனாக இருக்கிறான்

2:15,16 – புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசியாத யூதர்கள் தடையாக இருப்பதாக குறிப்பிடுகிறார். அவர்கள் ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்லாமல் மற்றவர்களையும் ஏற்றுக்கொள்ள விடாமல் தடைசெய்கிறார்கள். அவர்கள் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நிற்பதனால் கோபாக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் பவுல் அவர்கள் எல்லோரும் மனம் திரும்பவேண்டும் என்று அவர்களுக்காக ஜெபிக்கிறார் (ரோமர் 9:3;10:1).

<u>தெசலோனிக்கேயரை குறித்ததான கரிசனை (2:17—3:10)</u>

- பவுலின் இருதயம் தெசலோனிக்கேயரை திரும்பவும் பார்க்கவேண்டும் என்ற விருப்பத்தில் இருப்பதை காணமுடியும் (2:17).
- பவுலை போலவே தெசலோனிக்கேயர் பவுலை பார்க்க ஆசையாய் இருந்ததை நினைத்து மிகவும் சந்தோஷப்படுகிறார் (3:6,7)

பவுல் ஏதோ சுயநலத்திற்காக செயல்படுகிறார் என்ற எண்ணம் தெசலோனிக்கேயர் மத்தியில் இருக்கக் கூடாது என்பதற்காக அவர்களை தனது வார்த்தைகளால் உற்சாகப்படுத்துகிறார். பவுலின் வார்த்தைகள் மூலமாக அவர் எந்த அளவுக்கு தெசலோனிக்கேயர் மீது அன்பு வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

- பவுல் அவர்களை விட்டு பிரிந்து இருந்ததை மிகவும் துக்கமாக கருதுகிறார். சரீரத்தின் படி தூரமாக இருந்தாலும் ஆவியின்படி அவர்களோடு இருப்பதாக குறிப்பிடுகிறார் (2:17).
- பவுல் அவர்களைப் பார்க்க இரண்டொரு தரம் விருப்பப்பட்டாலும் சாத்தான் அதை தடை செய்தான் (2:18)
  - ➢ 16:6–7 ல் பரிசுத்த ஆவியானவர் பவுலை சுவிசேஷம் அறிவிக்க விடாமல் தடை செய்வதை காணலாம் .
  - ➢ சில சமயங்களில் தேவன் சுவிசேஷ கதவை திறந்து வைத்தாலும் நம்முடைய மனதிற்கு நிம்மதி இல்லை என்றால் அந்த ஊழியத்தை செய்ய முடியாது (2 கொரி 2:12,13).

ஆக தடை என்பது நம் மூலமோ, பரிசுத்த ஆவியானவரோ அல்லது சாத்தானோ கொண்டு வரலாம். நாம் தேவனோடு இணைந்திருக்கும் போது தான் இந்த தடை யாரால் வருகிறது என்பதை கணிக்க முடியும். சாத்தான் தடையைக் கொண்டு வந்தாலும் அந்தத் தடையை கூட தேவன் ஆசீர்வாதமாக மாற்றித் தருவார். மட்டுமல்லாது தேவனுடைய அனுமதி இல்லாமல் சாத்தான் கூட அந்த தடையை கொண்டு வர முடியாது. யோபுவை சோதிப்பதற்கு சாத்தான் தேவனுடைய அனுமதியோடுதான் வந்தான் (யோபு 1–2). நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பதால் தேவனுடைய அனுமதி இல்லாமல் எந்த ஒரு காரியமும் நடப்பதில்லை.

- பவுலின் நம்பிக்கையும் சந்தோசமும் தெசலோனிக்கேயரே (2:19).
  - ➢ அவர்களின் வளர்ச்சி பவுலின் நம்பிக்கையும்,
  - ➢ அவர்களின் மகிமை வாழ்வு பவுலின் சந்தோஷமும்,
  - ➢ அவர்களுடைய வெற்றி என்பது பவுலுக்கு கிடைக்கும் மகிமையின் கிரீடமாய் இருக்கிறது.

பவுல் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும் என்கின்ற எதிர்கால நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடுகிறார் (2 கொரி 5:10). இங்கே ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையும் அவனுடைய நன்மைக்கும் தீமைக்கும் ஏற்றார்போல அங்கே மதிப்பிடப்படும். பவுல் தனக்கு இதை ஒரு சந்தோஷமும் வெற்றியும் உள்ள ஒரு நிகழ்ச்சியாக இருக்கும் என கூறுகிறார்.

<u>விசுவாசிகளுக்கு கிடைக்கக்கூடிய கிரீடத்தை குறித்து வேதம் இவ்வாறு கூறுகிறது.</u>

- அழிவில்லாத கிரீடம் – இது நாம் வாழும் ஒழுக்கமான வாழ்க்கைக்கு கிடைக்கும் பரிசு (1 கொரி 9:25)
- மகிழ்ச்சியின் கிரீடம் – இது நாம் செய்யும் சுவிசேஷ பணிக்கு கிடைக்கும் பரிசு (2 தெச 2:19)
- நீதியின் கிரீடம் – இது கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி இருக்கிறவர்களுக்கு கிடைக்கும் பரிசு (2 தீமோ 4:8)
- ஜீவ கிரீடம் – இது சோதனையைச் சகிக்கிறவர்களுக்கு கிடைக்கும் பரிசு (யாக் 1:12; வெளி 2:10)
- மகிமையின் கிரீடம் – இது தேவனுடைய மந்தையை உண்மையோடு நடத்துகிறவர்களுக்கு கிடைக்கும் பரிசு (1 பேதுரு 5:4).

பவுல், சீலா மற்றும் தீமோத்தேயு ஆகிய இவர்கள் அத்தனே பட்டணத்தில் இருக்கும்போது பவுலுக்கு, தெசலோனிக்கேயரை காணவேண்டும் என்கிற விருப்பம் இருந்தது. தனது திட்டத்தை குறித்து கடிதம் மூலமாக தெசலோனிக்கேயருக்கு தெரியப்படுத்துகிறார் (2:17–18). புதிதாக சந்திக்கப்பட்ட தெசலோனிக்கேயரை தனியே விட பிரியமில்லாமல் அவர்களை உற்சாகப்படுத்தும்படியாக தீமோத்தேயுவை அனுப்புகிறார் (1 தெச 3:1,2). அதே சமயத்தில் சீலாவை பெரேயா அல்லது பிலிப்பி பட்டணத்திற்கு அனுப்பியிருக்கக்கூடும், காரணம் சீலாவும், தீமோத்தேயுவும் சேர்ந்து மக்கேதொனியாவிலிருந்து அவனை சந்திக்க வருகிறார்கள் (அப் 18:5).

<u>பவுல் தீமோத்தேயுவை அனுப்ப காரணம்</u>

1. உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு அவர்களைத் திடப்படுத்தி, ***விசுவாசத்தைப்பற்றி அவர்களுக்குப் புத்திசொல்லவும்,***

- தீமோத்தேயு தெசலோனிக்கேயரிடம், "உபத்திரவம் ஒரு கிறிஸ்தவனுக்கு வருகிற பொதுவான அனுபவமாக இருக்கிறது" என்று உற்சாகப்படுத்த பவுலால் அனுப்பப்பட்டான்.
- பவுலும் ஏற்கனவே இதை அவர்களுக்கு சொல்லி இருந்தார் (வச.4).
- உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம் (வச.3) என்று இப்போதும் கடிதம் மூலமாக தெரியப்படுத்துகிறார்.

இயேசுவும்கூட இந்த உலகத்தில் இருந்தபோது உபத்திரவம் கிறிஸ்தவனுக்கு உண்டு என்பதை குறித்து தெரிவித்திருக்கிறார்.

- என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் (மத்தேயு 5:11,12)
- ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன் (மத்தேயு 10:16)
- என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள் (மத்தேயு 24:9)

2. எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினது உண்டோவென்று, ***உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கும்...***

எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாக (வச.5) – என்று சொல்லும்போது விதைக்கப்பட்ட விதையானது கற்பாறை மற்றும் முட்களில் விழுந்த விதையை போல உபத்திரவங்களினாலும், பாடுகளினாலும் சிக்கிக்கொண்டும், வேர் ஆழமாய் போகாமல் இருந்து பலன் கொடாமல் இருந்துவிட கூடாது என்பதற்காக தீமோத்தேயுவை அனுப்புகிறார். கலாத்தியா நாட்டு சபைகளுக்கு எழுதும்போது பட்ட பாடுகள் எல்லாம் வீணாகிப் போயிற்று என்று எழுதுகிறார் (கலா 3:4).

<u>தெசலோனிக்கேயரை குறித்ததான பவுலின் சந்தோஷம் (3:6–10)</u>

தீமோத்தேயு பவுலை கொரிந்துவிலே சந்திக்கிறார் (அப் 17:16; 18:1,5).

தெசலோனிக்கேயர் அவர்களுடைய உபத்திரவத்திலும் விசுவாசத்தில் நிலைத்து நிற்கிறார்கள் என்ற நற்செய்தியை தீமோத்தேயு மூலம் பவுல் கேட்டபொழுது மிகவும் சந்தோஷம் அடைந்தார். பவுல் எதிர்பார்த்ததற்கும் மேலாக அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந்தார்கள்

- எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும், உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களை குறித்து ஆறுதலடைந்தோம் (வச.7).
    - ஒரு உண்மையான பெற்றோருக்குத்தான் தன் பிள்ளைகள் நன்றாக இருக்கும் பொழுது தங்களின் பாடுகளோ, கஷ்டங்கள் ஒரு பொருட்டாகவே தெரியாது. பவுலும்கூட அனேக பாடுகளையும் வேதனைகளையும் அடைந்தார் நான் அனுதினமும் சாகிறேன் என்று ரோமாபுரியாருக்கு எழுதுகிறார் (ரோமர் 8:36). எத்தனை பிரச்சனைகள் வந்தாலும் விசுவாசிகளுடைய விசுவாச வளர்ச்சியை பார்க்கும்போது ஆறுதலும், சந்தோஷமும் அடைகிறார்.
- நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம் (வச.8).
- உங்கள் முகத்தைக் கண்டு, உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக்கொள்கிறோமே (வச.10).
    - பவுல் தெசலோனிக்கேயரை பார்க்க வேண்டும் என்பதற்காக இரவும் பகலும் ஜெபிக்கிறார்.
    - மட்டுமல்லாது தேவனுடைய வழிநடத்துதலும் அவ்வாறாக இருக்க வேண்டும் என்கிறார்

## பவுலின் ஜெபம் 3:11–13

இந்த ஜெபமானது தெசலோனிக்கேயரிடம் பவுலுக்கு இருந்த கரிசனையை வெளிப்படுத்துகிறது. பவுல் இங்கு மூன்று காரியங்களுக்காக ஜெபிக்கிறார்.

1. அவர்கள் விசுவாசத்தில் வளரவும்...

அடிப்படையில் இது நம்மை தேவனுக்கு நேராக நடத்துகிறது.
இந்த கடிதத்தின் முந்தைய அத்தியாயங்களிலிருந்து தெசலோனிக்கேயர்கள் விக்கிரகாராதனையில் இருந்தும், தங்கள் பாவங்களிலிருந்தும் மனந்திரும்பி இயேசுவை விசுவாசித்தார்கள். இப்போது விசுவாசத்தை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க அவர் தீமோத்தேயுவை அனுப்பி வைத்தார்.

2. அன்பில் பெருகவும் ...

பவுல் அவர்களுடைய அன்பை அறிந்திருக்கிறார், ஆனாலும் அவர்களுடைய விசுவாசம் அதிகரிக்க ஜெபித்தவர், அவர்களுடைய அன்பும் பெருகவேண்டும் என்று ஜெபம் செய்கிறார்.
இந்த அன்பானது பவுல் தெசலோனிக்கேயரிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கு ஒப்பாக இருக்கவேண்டும் என்கிறார் (வச.12). ஒருவரிடம் அன்பை எதிர்பார்க்கும் போது முதலாவது நாம் அவர்களிடம் அன்பாக இருக்கிறோமா என்பதை நிதானித்து பார்க்க வேண்டும்.

- நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் – இது விசுவாசிகளோடு உள்ள அன்பு (உறவு)
- மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் – இது சபைக்கு வெளியே மற்றவர்களிடத்தில் வைத்திருக்கும் அன்பு (உறவு)

3. பரிசுத்தத்தை பாதுகாத்துக்கொள்ளவும் ஜெபிக்கிறார்

கிறிஸ்துவின் வருகையை குறித்து தெசலோனிக்கேயர் உறுதியாக இருந்ததை பவுல் அறிந்திருந்தார். ஆனாலும் அவர் வருகையில் நாம் அவருக்கு முன்பாக பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் (வச.13)
இன்றைக்கு நம்மில் அநேகர் கிறிஸ்துவின் வருகையை அறிந்திருக்கிறோம் ஆனால் அவருக்கு முன்பாக பரிசுத்தமாக நிற்பதற்கு ஆயத்தமாய் இருக்கிறோமா?

## மாதிரியுள்ள வாழ்க்கை (அதி.4)

நான்காம் அதிகாரம் விசுவாசிகள் நடைமுறை வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். 'நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளை' (வச.2) என்று சொல்வதினால் பவுல் ஏற்கனவே தெலோனேக்கே பட்டணத்தில் இருக்கும் பொழுது அவர்களுக்கு இது குறித்து அறிவுறுத்தி இருக்கிறார். இருப்பினும் கடிதம் மூலமாக திரும்பவும் அவைகளை நினைவூட்டுகிறார். ஒன்றுக்கும் மேற்பட்டமுறை ஒருவர் ஆலோசனை சொல்லும் போது அதை புறக்கணியாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம் (வச.1).

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயு மூலமாக தெசலோனிக்கேயரின் விசுவாசத்தைக் குறித்து கேள்விப்பட்டு, அவர்கள் உபத்திரவத்தின் மத்தியிலும் அந்த விசுவாசத்தில் உறுதியாக இருக்கிறார்கள் என்று அறிந்த போதிலும் இன்னும் அவர்கள் தேவனுக்கு பிரியமாக இருந்து, கிறிஸ்துவில் தேறினவர்களாக காணப்பட வேண்டும் என்று விரும்புகிறார். அதுதான் முதல் வசனத்தில் முக்கியமான சாராம்சம் ஆகும்.

- எப்படி நாம் தேவனுக்கு பிரியமாக இருந்து தேறினவர்களாக இருக்க முடியும்?
  வேத வசனத்தின் உதவியால் மட்டுமே.
  - ➢ வேதவாக்கியங்களெல்லாம்... தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி கொடுக்கப்பட்டிருக்கிறது (2 தீமோ 3:16).
  - ➢ எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து...உபதேசம்பண்ணுகிறோம் (கொலோ 1:28)
  - ➢ தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான் (லூக்கா 6:40)

அனேக சமயங்களில் ஒருவரை திருத்துவதற்கு நம்முடைய ஆலோசனைகளையும், நம்முடைய அனுபவங்களையும் சொல்லுகிறோம். ஒரு விதத்தில் அது நல்லதுதான் ஆனால் நம்மிடத்தில் குறைவு காணப்படுவதால் அவர்கள் நம்முடைய ஆலோசனையையும் நம்முடைய புத்திமதிகளையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் கிறிஸ்து பரிபூரணமானவர், வேதவசனம் குறைவில்லாதது, ஆகவே கிறிஸ்துவையும், வேத வசனத்தையும் குறித்துச் சொல்லும்போது எந்தவித மறுப்பும் சொல்லாமல் அதை ஏற்றுக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையில் அவர்கள் தேறுவதற்கு அது வழிவகுக்கும்.

<u>பாலியல் தூய்மை (4:3–8)</u>

- நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.
  - ➢ பரிசுத்தமாய் இருக்கவேண்டும் என்று சொல்லும் போது, அது பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கைக்கு அடையாளமாக இருக்கிறது.
- நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருக்கவேண்டும்.
  - ➢ ஒரு விசுவாசி தன்னுடைய சரீரத்தை எப்படியாக கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.
- தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல் இருக்கவேண்டும்
  - ➢ தேவனைகுறித்தும், தேவனுடைய சித்தத்தைகுறித்தும் விசேஷமான வெளிப்பாடு கிடைக்காத புறஜாதிகளைப் போல நாம் வாழ கூடாது.
- அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளவேண்டும்.
  - ➢ பாலியல் ஒழுக்கக்கேடு என்பது தேவனுடைய சித்தத்திற்கு விரோதமானது மட்டுமல்ல நம்முடைய வாழ்க்கைத்துணைக்கு விரோதமாக செய்கிற பாவமாகவும் இருக்கிறது.
- இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங்குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்.
  - ➢ இதற்கு கர்த்தர் நியாயத்தீர்ப்பு கொடுக்கிறவராக இருக்கிறார் .

ஆகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது, நாம் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க இருக்கவேண்டும் (3:13).

<u>நம்முடைய சரீரத்தை குறித்து பவுல் கூறும்போது:</u>

- சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது (1 கொரி 6:13).
- நம்முடைய சரீரம் உயிர்த்தெழும் (6:14) – இது மகிமையின் சரீரமாக மாற்றப்படும்.
- நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயம் (6:19)
- நம் உடல் ஒழுக்கக்கேட்டில் பாதிக்கப்படுகிறது (6:18)
- பவுல் முடிவுரையாக கூறுவது... தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (6:20).

<u>சகோதர சிநேகம் (4–12)</u>

சகோதர சிநேகத்தைக்குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்படிக்கு தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களே. அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா

நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும் வேண்டும் என பவுல் அறைகூவல் விடுக்கிறார் (1 தெச 4:9,10)

பவுல் இங்கே சகோதர சிநேகத்தைக்குறித்து அதிகம் சொல்லவில்லை ஆனால் கிறிஸ்துவானவர் இதை குறித்து என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்ப்போம்?

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவான் 13:34).

- இது ஒரு புதிய கட்டளை. ஏனெனில் பழைய ஏற்பாட்டில் உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டிருக்கிறது (மத்தேயு 5:43)

நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார் (யோவான் 13:35)

- தேவன் நம்மை இந்த உலகத்திற்கு அடையாளம் காட்டுவதற்கு ஏற்படுத்தி இருக்கிற ஒரே வழி அன்பு
- இந்த உலகத்திலே மக்கள் தங்களை அடையாளம் காட்டுவதற்கு அனேக வழிகளை தெரிந்தெடுத்திருக்கிறார்கள். கலரின் அடிப்படையில், மொழியின் அடிப்படையில், அடையாளங்களை உடலில் குத்திக்கொள்வது என இன்னும் அனேக வழிகளின் மூலமாக மக்கள் தங்களை ஒரு குழுவாக அடையாளம் காட்டுகிறார்கள்.
    - ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடியிருந்தார்கள். ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். இந்தத் தேசமெல்லாம் உனக்கு முன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான் (ஆதி 13:7–9)

ஆபிரகாமுக்கும் லோத்துவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டபோது ஆபிரகாம் பிரச்சனையை கையாண்ட விதம்.

- நாம் சகோதரர் என்ற எண்ணம் அவனுக்குள் இருந்தது
- நம்மை சுற்றிலும் புறஜாதிகள் இருக்கிறார்கள் என்ற எண்ணமும் இருந்தது
- சகோதரனுக்காக விட்டுக் கொடுக்கிற எண்ணமும் காணப்பட்டது

தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம் (1 யோவான் 4:21)

இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான் (1 யோவான் 5:1)

தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன் (1 யோவான் 4:20)

ஆதி திருச்சபையில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து தங்களுக்கு சொன்ன அந்த அன்பை கடைப்பிடித்தார்கள்.

- விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள்.
- காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார் (அப் 2:44–47)
    - அன்பை செயலில் காட்டும் போது மட்டுமே மற்றவர்களை நாம் ஆதாயப்படுத்த முடியும்..

நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல… (யோவான் 13:34).

<u>கிறிஸ்து எப்படி அன்புகூர்ந்தார்?</u>

- நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே – நிபந்தனையின்மை (ரோமர் 5: 8),
- பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் – தியாகம் (2 கொரிந்தியர் 5:21),
- கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் – மன்னிப்பு (எபேசியர் 4:32),

இதுபோல விசுவாசிகளும் எப்படியெல்லாம் ஒருவருக்கொருவர் அன்பு காட்ட முடியும்?

- ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் (ரோமர் 13:8).
- எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும் (1பேதுரு 4:8)
- சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள் (ரோமர் 12:10)
- நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி... சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள் (1 பேதுரு 1:22)
- அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் (1 யோவான் 3:16).
- உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? (லூக்கா 6:32)
- சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார் (1 கொரி 12:25)
- இடுக்கணில் உதவவே சகோதரன் பிறந்திருக்கிறான் (நீதி 17:17).

❖ சங்கீதம் 133 சகோதர சிநேகத்திற்கு ஒரு நல்ல உதாரணம் உள்ள சங்கீதமாகும். சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணும்போது அங்கே சண்டை இருப்பதில்லை. சகோதரர் ஒருமித்து வாசம் செய்வதை நல்ல தைலத்திற்கு ஒப்பாக சங்கீதக்காரன் சொல்கிறார். ஆங்கிலத்தில் 'ஸ்வீட் ஆயில்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆயில் வாகனங்களுக்கு போடும் ஆயில் அல்ல, இது ஒலிவ மரத்தில் இருந்து எடுக்கப்படுகிறது. இது அவனுடைய தலையில் ஊற்றப்பட்டு தாடியின் வழியாக வழிந்து வஸ்திரங்களை நனைந்து நல்ல வாசனையை கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.

- பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது என்று சங்கீதக்காரன் கூறுகிறான். பனியானது மழை இல்லாத சமயத்தில் தாவரங்கள் வளர்வதற்கு உதவியாக இருக்கிறது. சகோதர சிநேகம் என்பது சேர்ந்து இருக்கும் பொழுது அது நல்ல ஒரு வாசனை உள்ளதாகவும் அது மற்றவர்களுடைய வளர்ச்சிக்கு உதவியாகவும் இருக்க வேண்டும்.

❖ இந்த சகோதர ஐக்கியம் எப்படி சாத்தியமாகும் என்று கேட்கலாம். இதற்கு நல்ல உதாரணம்... யாக்கோபு ஆதியாகமம் 49 ஆம் அதிகாரத்தில் தன்னுடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் போது இப்படியாக அவன் ஆசீர்வதிக்கிறார்

- யூதா பாலசிங்கம் (49:9)
- இசக்கார் பலத்த கழுதை (49:14)
- தாண் சர்ப்பம் (14:17)
- நப்தலி பெண்மான் (49:21)
- பென்யமீன் பீறுகிற ஓநாய் (49:27)

இப்படி மிருக சுபாவம் உள்ளவர்கள் எப்படி ஒன்றாக இருக்க முடியும் ஒரே குடும்பம் ஒரே வயிற்றுப் பிள்ளைகள் ஆனால் சுபாவம் வேறு. இதுபோல தான் நம்முடைய சுபாவங்கள் சிலவைகள் வித்தியாசமாக இருக்கலாம் ஆனால் நாம் எல்லாரும் தேவனுடைய பிள்ளைகள் ஆகவே நாம் நம்முடைய ஐக்கியத்தை காட்டுவதில் தீவிரமாக இருக்க வேண்டும்

➢ சகோதரரே, நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்...காரணம் தெசலோனிக்கேயர் அன்பில் அதிகரித்திருக்கிறார்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார் "நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும், அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது (2 தெச 1:3)

புறம்பேயிருக்கிறவர்களைப்பற்றி யோக்கியமாய் நடந்து.. (1 தெச 4:11)

உலக மக்களுக்கு முன்பாக நாம் சாட்சியாக இருக்க வேண்டும் என்று பவுல் வலியுறுத்துகிறார். கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது (2 தீமோ 2:19)

கிறிஸ்து சொல்லும்போது: நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் (மத் 5:124). ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு (லூக்கா 11:35) என்கிறார்.

<u>ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு (1 தெச 4:11)</u>

கிறிஸ்துவில் நாம் குறைவில்லாமல் பூரணமாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாக இருக்கிறது. பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் (மத் 5:48).

பேதுரு தன்னுடைய நிருபத்திலே சொல்லும்போது: ...தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது (2 பேதுரு 1:7,8).

<u>அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும் (1 தெச 4:12)</u>

கூடுமானவரைக்கும் தேவையில்லாத சொற்களைத் தவிர்த்து அமைதியாய் இருப்பது நல்லது... தேசலோனேக்கே சபையில் சிலர் தங்களுடைய வேலையை செய்யாமல் பிறருடைய காரியத்தில் மூக்கை நுழைப்பவர்களாக காணப்பட்டார்கள்.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது: அவர்கள் (இளம் விதவைகள்) சோம்பலுள்ளவர்களாய், வீடுவீடாய்த் திரியப்பழகுவார்கள்; சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல, அலப்புகிறவர்களாயும் வீணலுவற்காரிகளாயும் தகாத காரியங்களைப் பேசுகிறவர்களாயுமிருப்பார்கள் (1 தீமோ 5:13).

அவர்களுக்கு பதில் சொல்லும் ஆலோசனை: <u>உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும்,</u>

உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்.

- இன்று அவரவர் தங்கள் தங்கள் வேலையை விட்டுவிட்டு மற்றவர் வேலையில் தலையிடும் போது பிரச்சனை எழுகிறது. பவுல் இதை தனது இரண்டாவது நிருபத்திலேயும் குறிப்பிடுகிறார்.

உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய் (busybodies), ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம் (2 தெச 3:11,12).

- ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது (2 தெச 3:10).

பவுல் அவர்களுக்குள்ளே இருந்தபோது எப்படி இருந்தார் என்கின்ற மாதிரியை கூறுகிறார்: நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம் (2 தெச 3:7,8).

## <u>கிறிஸ்துவின் வருகை (4: 13–18)</u>

கிறிஸ்துவின் வருகை இரண்டு கட்டமாக நடைபெறும்

- முதலாவது அவர் சபையை தன்னோடு எடுத்துக்கொள்ளும்படியாக வருகிறார்
- இரண்டாவது உலகம் அனைத்தையும் நியாயம் தீர்க்க வருவார்.

அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை (வ.13)

இங்கே நித்திரை என்பது மரணத்தை குறிக்கிறது (மாற்கு 5:39, யோவான் 11:11; அப் 7:60; 1 கொரி 11:30)

பழைய ஏற்பாட்டில் மரணத்திற்கு நித்திரை என்கின்ற வார்த்தை மட்டுமல்ல படுத்துக்கொள்ளபோகுதல் அதாவது 'sleep' என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.


- நான் என் பிதாக்களோடே படுத்துக்கொள்ளவேண்டும் (ஆதி 47:30)
- நீ உன் பிதாக்களோடே படுத்துக்கொள்ளப்போகிறாய் (உபா 31:16)


ஆக கர்த்தருடைய பிள்ளைகளுடைய மரணம் என்பது அது ஒரு நித்திரை அதாவது தூக்கத்திற்கு சமமாக இருக்கிறது. 'தூக்கம்' என்று சொன்னால் அடுத்து விடியல் ஒன்று அதாவது 'எழுந்திருப்போம்' என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார் (வ.14).

மரணம் நமக்குப் பிரியமானவர்களுக்கு துக்கத்தை கொண்டு வருவது உண்மைதான். இயேசுவும்கூட லாசரு மரித்தபோது அவனுக்காக கண்ணீர் விட்டதை யோவான் 11:35 வாசிக்க முடியும். ஆனால் அந்த துக்கத்தின் மத்தியிலும் நமக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது என்பதை பவுல் குறிப்பிடுகிறார்.

தெசலோனிக்கேயரிடம் உயிர்த்தெழுதலை குறித்த ஒரு குழப்பம் இருந்தது. பொதுவாக இன்று இரண்டு வகையான கருத்துக்கள் காணப்பட்டன.

- உபத்திரவ காலத்திற்கு முன் சபை எடுத்துக்கொள்ளப்படும்
- உபத்திரவ காலத்திற்கு பின்பு சபை எடுத்துக்கொள்ளப்படும்




சுருக்கமாகச் சொன்னால், நாம் தற்போது கிருபையின் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இது இயேசுவின் இரகசிய வருகையுடன் முடிவடையும். அதன் பின்பு உபத்திரவகாலம் இருக்கும். அதற்குப்பின்பு ஆயிரவருட இயேசுவின் ஆளுகை இந்தப் பூமியில் நடைபெறும்.

இயேசு சொன்னார்: "பரலோகத்தில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்"; நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் (யோவான் 14:1–3).

தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபிரெயர் 9:28).

## இரகசிய வருகை: (Secret Advent)

திருடன் வருகிற விதமாக யாரும் எதிர்பார்க்காத ஒரு நேரமாக இருக்கும். திருடன் வந்து விட்டு போனபின்பு எப்படி எல்லாரும் திருட்டை அறிந்துகொள்கிறார்களோ அப்படியே இரசியவருகை நடந்து முடிந்தபின் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை முடிந்துவிட்டது என்று அறிந்துகொள்ளுவார்கள். இந்த வருகையில் முதலாவதாக கிறிஸ்துவுக்குள் மரித்த பரிசுத்தவான்கள் உயிரடைவார்கள், இரண்டாவதாக உயிரோடிருக்கும் நாமும் அவருடனேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளபப்படுவோம். இந்த இரண்டும் கண்ணிமைக்கும் நேரத்தில் (twinkling of an eye) நடைபெறும். இரவிலே திருடன்வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள் (I தெச 5:2).

சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; [2] நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும் (1கொரிந்தியர் 15:50–54).

இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள் (I தெசலோனிக்கேயர் 4:14–18)

இதே காரியத்தை யோவான் 14 ஆம் அதிகாரத்தில் முதல் மூன்று வசனத்திலே காணலாம்.

| யோவான் 14:1–3 | 1 தெசலோனிக்கேயர் 4:13–18 |
|---|---|
| கலக்கம் வ.1 | துக்கம் வ.13 |
| விசுவாசமாயிருங்கள் வ.1 | விசுவாசிக்கிறோமே வ.14 |
| தேவன், கிறிஸ்து வ.1 | தேவன், கிறிஸ்து வ.14 |
| நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன் வ.2 | நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது வ.15 |
| நான் மறுபடியும் வந்து வ.3 | கர்த்தருடைய வருகைமட்டும் வ.15 |
| சேர்த்துக்கொள்ளுவேன். வ.3 | எடுத்துக்கொள்ளப்பட்டு, வ.17 |
| என்னிடத்தில் வ.3 | கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக வ.17 |
| நான் இருக்கிற இடத்திலே வ.3 | கர்த்தருடனேகூட இருப்போம். வ.17 |

## உபத்திரவ காலம்

கர்த்தருடைய வருகைக்குப்பின் உபத்திரவகாலம் இருக்கும். இது சுமார் ஏழு வருடங்கள் இருக்கும். இந்த உபத்திரவகாலத்தில் அந்திக்கிறிஸ்து பூமியில் வலுசர்ப்பமாகிய பிசாசின் சக்தியுடன் ஆளுவான். இந்த உபத்திரவகாலத்தில் கைவிடப்பட்ட கூட்டத்தாரை அந்திக்கிறிஸ்து உபத்திரவப்படுத்துவான். பின்பு யூதர்களுடன் ஒப்பந்தம் செய்து தேவாலயம் கட்ட உதவியாயிருப்பான். [இப்போது அங்கே தேவாலயம் இல்லை, ஏனெனில் தேவாலயம் கி.பி. 70 ம் வருடம் ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடிக்கு இயேசு சொன்னது போல் இடிக்கப்பட்டது. அங்கே தற்போது ஒரு மசூதி

இருக்கின்றது]. அதன்பின் தன்னை வணங்கவேண்டும் என்று சொல்லுவான். அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து,தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் (II தெசலோனிக்கேயர் 2:4). அப்பொழுது யூதர்கள் அவனுடன் செய்த உடன்படிக்கையை முறித்துபோட்டுவிடுவார்கள். அவன் யூதர்களை துன்புறுத்துவான். இந்த யூதர்களில் 144000 பேர் முத்திரையாக பாதுகாக்கப்படுவார்கள் (வெளி 7).

ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது. (1260 days/360 = 3.5 years) வெளி 12:6

என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன். (வெளி 11:3)

இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலிருமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.

அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் (வெளி 7:9–14).

## வெளிப்படையான வருகை (Public Advent)

உபத்திரவ காலம் முடிந்த பின்பு, இயேசு ஒலிவமலையில் வந்து இறங்குவார். ஒலிவமலை இரண்டாக பிரியும். அவரை இதுவரை விசுவாசிக்காத யூதர்கள் தங்கள் ஒரே பேறான குமாரனுக்காக அழுது புலம்புவது போல் அழுவார்கள். அவரைக் குத்தினவர்களின் (யூதர்கள்) கண்கள் அவரைக்காணும். இயேசுவே மேசியா என்று அப்பொழுது அறிந்துகொள்ளுவார்கள்.

நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள் (சகரியா 12:10).

அந்திக்கிறிஸ்து மற்றும் அவன் சேனைகளை அவர் தமது வாயிலிருந்து புறப்படும் பட்டயத்தால் ஜெயிப்பார். (அர்மகெதோன் யுத்தம். Battle of Armageddon வெளி 16:16, வெளி 19:13–21)

அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக்கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் (மத்தேயு 24:29,30).

கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார். அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும் (சகரியா 14:3–5).

## ஆயிரவருட ஆளுகை, நியாயத்தீர்ப்பு, நித்தியம்

அந்திக்கிறிஸ்துவின் சேனையை வென்றபின்பு பழைய பாம்பாகிய பிசாசென்னும் வலுசர்ப்பம் பிடிக்கப்பட்டு பாதாளத்தில் ஆயிரவருடம் அடைக்கப்படுவான். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான் (வெளி 20:2).

1000 வருட ஆளுகை இந்த பூமியில் இதன்பின்பு துவங்கும். அப்பொழுது ஏதேனில் இருந்த நிலமையை மீண்டும் பூமியில் இயேசு கொண்டுவருவார். அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே

படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப்படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்குங்குழந்தை விரியன்பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும், என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் (ஏசாயா 11:6–9 6).

ஆயிரவருட ஆளுகைக்குப்பின்பு பிசாசானவன் பாதாளத்திலிருந்து திறந்துவிடப்படுவான். இவன் தன் சேனைகளோடு (கோகு, மாகோகு) கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவருவான். இதற்குப் பின்பு பிசாசும் அவன் சேனையும் ஆதிமுதலாக அவர்களுக்கென்று உண்டாக்கிவைக்கபட்டிருந்த அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள். மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள். தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது. (வெளி 19:21; 20:9). இதன் பின்பு "வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு" இருக்கும். பூமி மரித்தோரை ஒப்புவிக்கும். தாங்கள் செய்த கிரியைக்கான பலனை அடையும்படி பரலோகத்துக்கும் நரகத்தும் ஜனங்கள் வேறுபிரிக்கப்படுவார்கள். அநேகர் நித்திய நித்தியமாய் தேவனோடிருப்பார்கள். அநேகர் நித்திய நித்தியமாய் நரகம் என்னும் அக்கினிக்கடலில் வாதிக்கப்பட்டு இருப்பார்கள்.

<u>கர்த்தருடைய நாள் (5: 1–3)</u>

முந்திய அதிகாரத்தில் ஒரு சந்தோஷமான நம்பிக்கையைக் குறித்து பவுல் குறிப்பிடுகிறார். ஆனால் இப்பொழுதோ ஒரு எச்சரிப்பை கொடுக்கிறார். கிறிஸ்துவின் வருகையில் எந்த நேரத்திலேயும் அவரை சந்திக்க ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்று பவுல் தெசலோனிக்கேயரை அறிவுறுத்துகிறார்.

- கர்த்தருடைய நாள் என்பது சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிற்பாடு முதல் 1000 வருட அரசாட்சி வரை நடைபெறும் மிக நீண்ட வரலாற்று சம்பவம் ஆகும். வெளிப்படுத்தின விசேஷம் 6 முதல் 19 வரை உள்ள அதிகாரங்கள் இதுகுறித்து விவரிக்கின்றன.

இவைகள் நடக்குங்காலங்களையும் சமயங்களையுங்குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை (வச.1)

சபை எடுத்துக்கொள்வதை அதிகமாக விவரித்தது போல பவுல் கர்த்தருடைய நாளை குறித்து அதிகமாக விவரிக்கவில்லை. பழைய ஏற்பாட்டில் அனேக இடங்களில் கர்த்தருடைய நாளை குறித்து நாம் வாசிக்க முடியும்.

- கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! (ஆமோஸ் 5:18)
- தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கொரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது (ஏசாயா 13:9–11).
- கர்த்தருடைய நாள் என்கிற சத்தத்துக்குப் பராக்கிரமசாலி முதலாய் அங்கே மனங்கசந்து அலறுவான். அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள். அது அரணிப்பான நகரங்களுக்கும், உயரமான கொத்தளங்களுக்கும் விரோதமாக எக்காளம் ஊதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள். மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், அவர்கள் குருடரைப்போல நடக்கும்படி நான் அவர்களை வருத்தப்படுத்துவேன்; அவர்கள் இரத்தம் புழுதியைப்போல் சொரியப்படும்; அவர்கள் மாம்சம் எருவைப்போல் கிடக்கும். கர்த்தருடைய உக்கிரத்தின் நாளிலே அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது; அவருடைய எரிச்சலின் அக்கினியினால் தேசமெல்லாம் அழியும், தேசத்தின் குடிகளையெல்லாம் சடிதியாய் நிர்மூலம்பண்ணுவார் (செப்பனியா 1:14–18).

இந்த நாளானது இரவிலே திருடன் வருகிற விதமாய் இருக்கும் என்று பவுல் குறிப்பிடுகிறார் (வச.2).

கர்த்தருடைய நாளானது இரவில் தான் இருக்கும் என்று அவர் குறிப்பிடவில்லை ஆனால் உலகத்தில் சில இடங்களில் இரவாகவும் சில இடங்களில் அது பகலாகவும் இருக்கும். இங்கே பவுல் சொல்ல வருவதின் கருத்து என்னவென்றால்…

- திருடன் வருகிற நேரத்தை நாம் அறிவதில்லை அதுபோல கிறிஸ்துவின் வருகை இருக்கும். அடுத்து நாம் விழித்திருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறார் (மத் 24:43,44)

வச.3 ல் சொல்லப்படும் 'அவர்கள்' என்பது சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிற்பாடு கைவிடப்பட்ட அவிசுவாசிகளை குறிக்கிறது. சமாதானத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அவர்களுக்கு இந்த நாள் அதிர்ச்சியை கொடுக்கக் கூடியதாக இருக்கும். முதல் மூன்றரை வருடம் அவர்கள் எதிர்பார்த்த வண்ணம் சமாதானம் இருக்கும் என்றாலும் அதன் பிற்பாடு

உபத்திரவமானது மிகவும் கொடியதாக இருக்கும். கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை.

இங்கு ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும். அந்த நாளில் பவுலும், தெசலோனிக்கேயரும் இருப்பதில்லை என்பதை குறிப்பிடுகிறார் காரணம், அதற்கு முன்பாகவே சபையானது எடுத்துக்கொள்ளப்படும்.

<u>விசுவாசிகளின் ஆயத்தம்(5:4–11)</u>

- விசுவாசிகள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே (வச.4)
- வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள் (வச.5)
- நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே (வச.5)
- நாம் பகலுக்குரியவர்கள் (வச.8)

விசுவாசிகளின் வாழ்க்கை என்பது அவிசுவாசிகளின் வாழ்க்கையை விட முற்றிலும் மாறுபட்டது. அது இருளுக்கும் வெளிச்சத்துக்கும் உள்ள வித்தியாசத்தை போன்றது.

- முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள் (எபேசியர் 5:8).

A. மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு… (வச.6)

- இங்கு தூக்கம் 'என்பது' 4ம் அதிகாரத்தில் சொன்னது போல மரணத்தை குறிப்பது அல்ல. இது கிறிஸ்துவின் வருகையை குறித்து அசதியாய் இருப்பதைக் குறிக்கிறது. நாம் அசதியாய் இராமல் கிறிஸ்தவனுடைய வருகைக்கு காத்திருக்கிறவர்களாக காணப்பட வேண்டும்.
  - ➢ …நீங்கள்… நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள் (1 கொரி 1:7)
  - ➢ தேவகிருபையானது… நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது (தீத்து 2:13)
  - ➢ கிறிஸ்துவும்… தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபி 9:28)
  - ➢ தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம் (2 பேதுரு 3:12).

B. அதுமட்டுமல்ல தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம் (வச.6) என்றும் பவுல் குறிப்பிடுகிறார்.

- தண்ணீர் தெளிவாக இருக்கும்போது மாத்திரமே உள்ளே இருக்கக்கூடிய பொருள்களை நாம் தெளிவாக காண முடியும் கலங்கின தண்ணீரில் தெளிவாக பார்க்க முடியாது. அது போல நம்முடைய சிந்தையும், நம்முடைய இருதயமும் வேத வசனத்தில் தெளிவாக இருக்கும்போது மட்டுமே கிறிஸ்தவனுடைய வருகையை குறித்து நாம் புரிந்து கொள்ள முடியும்.

அவிசுவாசிகளுக்கு இப்படிப்பட்ட ஆவிக்குரிய உறவோ தெளிவோ கிடையாது (வச.7)

C. விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவாம்.

இங்கு பவுல் கிறிஸ்தவ வாழ்க்கையை ஒரு போர்ச்சேவகனுக்கு ஒப்பிட்டுக் கூறுகிறார். கிறிஸ்தவ வாழ்க்கையானது போராட்டம் உள்ள ஒரு வாழ்க்கையாகும்.

- ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு (ரோமர் 13:12) நாம் போராடவேண்டும் என்று ரோமாபுரியாருக்கு எழுதுகிறார்.
- நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள் (எபிரெயர் 6: 10–18) என்று அந்த பகுதியை ஆரம்பிக்கும் எபிரெய எழுத்தாளர், எந்தச் சமயத்திலும்… விழித்துக்கொண்டிருங்கள் (வச.18) என்று முடிக்கிறார்.
- விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு (1 தீமோ 6:12; 2 தீமோ 2: 3) என்று தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறின பவுல் தன்னுடைய வாழ்க்கையில் அதை நிறைவேற்றினார் (2 தீமோ 4: 7).

இங்கு பவுல் இரண்டு விதமான ஆயுதங்களை குறிப்பிடுகிறார்.

- விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசம்
- இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீரா
    - ஒரு ரோம போர்ச்சேவகனுடைய தலைச்சீரா அவனது தலையையும், மார்க்கவசமானது அவனது கழுத்து முதல் இடுப்புவரையும் அவனுடைய சரீர உறுப்புகளை பாதுகாக்கக்கூடியதாகவும் இருக்கும். தேவன் பெயரில் வைக்கும் விசுவாசம் நமக்கு உள்ளான பாதுகாப்பையும், பிறரிடத்தில் வைக்கும் அன்பானது நமக்கு வெளிப்புறமான பாதுகாப்பையும் கொடுக்கிறது. இந்த இரண்டையும் (விசுவாசத்தின் கிரியையை, அன்பின் பிரயாசம் – 1:2) நாம் பிரிக்க முடியாது.
    - நாம் பெற்றிருக்கும் இரட்சிப்பானது தேவனுடைய கோபாக்கினை நாளில் இருந்து நம்மை விடுவிக்கிறது (வச.9)

<u>நாம் விழித்திருப்பவர்களானாலும் நித்திரையடைந்தவர்களானாலும் (வச.10)</u>

பவுல் இங்கு மரணத்தை குறித்தோ அல்லது உயிரோடு இருப்பவர்களை குறித்து எழுதவில்லை. ஆவிக்குரிய நிலையில் அவர்கள் விழித்து இருந்தாலும் சரி அல்லது மந்தமாக இருந்தாலும் சரி அவர்களை கர்த்தர் உயிரோட எழுப்பி அவரோடு கூட உட்கார வைப்பார். இந்த உலகத்தோடு ஒத்துபோய் வாழ்ந்தாலும் அல்லது கிறிஸ்துவின் வருகையை குறித்த ஒரு எதிர்ப்பார்ப்பு இல்லாமல் இருந்தாலும் சரி, இரட்சிக்கப்பட்ட அனைவரும் கிறிஸ்துவோடு கூட இருப்பார்கள் என்பதை பவுல் இங்கே குறிப்பிடுகிறார். அதற்காக நாம் உலகப்பிரகாரமாக நம்முடைய இஷ்டப்படி வாழ்ந்தாலும் பரவாயில்லை என்பது அர்த்தமல்ல அவனவனுடைய கிரியைகளின்படி தீர்ப்பையும் கர்த்தர் கொடுப்பார்.

ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள் (வச.11). பவுலுடைய இந்த வார்த்தை மட்டுமல்ல, நாமும் கூட ஒருவருக்கொருவர் இந்த வார்த்தைகளினாலே ஆறுதல் படுத்தவேண்டும். ஏற்கனவே 4:18லும் கூட ஒருவரையொருவர் தேற்றுங்கள் என்று சொல்லுகிறார். இன்றைக்கு விசுவாசிகளாகிய நாம் தேவையில்லாத காரியங்கள் மூலமாக காயப்படுத்துவதை விட வேதவசனத்தை பேசி ஆறுதல் படுத்துவது மேலானதாகும்.

<u>சபை வாழ்க்கை (12 –15)</u>

எதிர்கால நிகழ்ச்சிகளை குறித்து பேசிக் கொண்டிருந்த பவுல் இப்பொழுது தற்காலத்தில் விசுவாசிகளுக்கு இருக்கக்கூடிய பொறுப்புகளை குறித்து கூறுகிறார். முதலாவதாக, சபையில் இருக்கக்கூடிய மூப்பர்கள் அல்லது பொறுப்பாளர்களுடன் விசுவாசிகளுக்கு இருக்கக்கூடிய உறவுகளை குறித்து எழுதுகிறார். கிறிஸ்தவ சபைகளில் தலைவர்கள் இந்நாட்களில் "மூப்பர்" (Elder), "கண்காணி" (Bishop/Overseer), மற்றும் "மேய்ப்பர்" (Pastor/Shepherd) என அழைக்கப்படுகிறார்கள். இம்மூன்றும் ஒரே நபரையே குறிக்கிறது. இவர்களுடைய வேலை மந்தையை மேய்ப்பதாகும்.

- எபே 4:11 – மந்தையை மேய்ப்பவன் <u>மேய்ப்பன்</u>
- அப் 20:28 – மந்தையை மேய்க்கும் <u>கண்காணி</u>
- 1 பேதுரு 5:1–3 – <u>மூப்பன்</u> மந்தையை மேய்க்கனும்

எல்லா இடங்களிலும் பண்மையில் சொல்லப்பட்டிருக்கிறது (பிலி 1:1; அப் 11:3 o; 14:23; 20:17; தீத்து 1:5). ஆகவே மூப்பர்கள் என்பவர்கள் ஒருவரல்ல ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் என்பதை அறியலாம். மட்டுமல்லாது சபையிலே உதவிக்காரர்கள் (பிலி 1:1) என்பவர்களும் உண்டு. இந்த உதவிக்காரர்கள் பெண்களாகவும் இருக்கலாம். கொரிந்து சபையிலே பெபெயா எனப்பட்ட ஒரு பெண் உதவியாளராக இருந்தாள் (ரோமர் 16:1). ஆனால் மூப்பர்கள் எனப்படுகிறார்கள் சகோதரர்களாக (ஆண்களாக) மட்டுமே இருக்க முடியும்.

வச.12ல் பவுல், மூப்பர்கள் அல்லது பொறுப்பாளர்களை குறித்து மூன்று காரியங்களை குறிப்பிடுகிறார்.

a. <u>உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு,</u>

வேதத்தைப் பொறுத்தமட்டில், தலைவர்கள் எனப்படுகிறவர்கள் கொடுக்கப்பட்ட பதவியின் (Title) அடிப்படையில் அறியப்படுவதில்லை (1 தீமோ 3:1) அவர்கள் செய்யும் வேலையின் அடிப்படையில் அறியப்படுகிறார்கள். தேவனுக்கும், விசுவாசிகளுக்கும் இடையில் அவர்கள் செய்யும் வேலையின் அடிப்படையில் தான் அவர்களுக்கு கொடுக்கப்படுகிற பதவி (Title) உண்மையாகிறது.

b. <u>கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து,</u>

தலைவர்களாகிய மேய்ப்பர்கள் மந்தையை மேய்த்து அதை கண்காணிப்பது மூலமாக அறியப்படுகிறார்கள். இது அதிகாரத்தின் தெளிவான மற்றும் முறையான ஒழுங்கை விவரிக்கிறது. அப்20:28–ல், "உங்களை" அதாவது

"மூப்பர்களைக்" குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் (to pastor or shepherd) பரிசுத்த ஆவி உங்களைக் (மூப்பர்களை, elders) கண்காணிகளாக (Bishops or Overseers) வைத்த மந்தை (church) முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள், என்று வாசிக்கிறோம்.

c. உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்கள்

புத்தி சொல்லுதல் என்கின்ற வார்த்தை ஆங்கிலத்தில் Admonish என்று பயன்படுத்தப்பட்டு இருக்கிறது அதாவது எச்சரித்தல் அல்லது கண்டித்தல் என்று அர்த்தமாகும். மோரிஸ் என்பவர் சொல்லும்போது, "தலைவர்கள் குரலை உயர்த்தி கண்டிக்கும்போது அவர்கள் நமக்கு மூத்த சகோதரர்களாக இருக்கிறார்கள்" என்று குறிப்பிடுகிறார். அப்20:29, 30-ல் எபேசு சபையின் மூப்பர்கள் அதாவது எபேசு சபையின் கண்காணிகள், மந்தையாகிய தேவனுடைய சபையை ஓநாய்களிடமிருந்து தப்புவித்து, மாறுபாடான போதகங்களுக்கு விலக்கி மீட்க வேண்டும் என்று மேய்ப்பர்களுடைய வேலையை சுட்டி காட்டுகிறது.

- மூப்பராக சபையின் தேவையை நிதானித்து அறிந்து ஆவிக்குரிய வளர்ச்சியில் வளர்க்க வேண்டும்;
- கண்காணியாக எப்பொழுதும் உண்மையுள்ள உக்கிராணக்காரனைப் போல நோக்கமாயும் விழிப்போடும் இருக்க வேண்டும்.
- மேய்ப்பராக மந்தையை (சபையை) ஓநாய்களுக்கு தப்புவித்து (மாறுபாடான போதகங்களுக்கு விலக்கி) காக்கவேண்டும்;

விசுவாசிகளின் பொறுப்பு

- நீங்கள் மதித்து (1 தெச 5:13), நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாக திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும் (1 தீமோ 5:17,18). வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே (மத்தேயு 10:10).
- அவர்களை (மூப்பர்களை) மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளவேண்டும் (1 தெச 5:13).
- உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் (1 தெச 5:13=ரோமர் 12:18).
- எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் (1 தெச 5:25; எபி 13:18)
- என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன் (பிலிப்பியர் 4:10)
- உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே (எபி 13:17).
- நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும், என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல், உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன் (பிலிப்பியர் 4:16,17).

விசுவாசிகளுக்கும் மூப்பர்களுக்கும் இருக்கிற உறவை விவரித்த பிற்பாடு பவுல் விசுவாசிகளுக்குள் இருக்கவேண்டிய சில ஒழுங்குகளையும் எழுதுகிறார்.

மேலும், சகோதரரே...

a. ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள் (5:14)

இவர்கள் படிப்படியாக, தங்கள் பொறுப்பற்ற நடத்தை மூலம் சபையின் சமாதானத்தை தொந்தரவு செய்ய வலியுறுத்துகின்றனர். 2 தெசலோனிக்கேயர் 3: 6-12-ல் விவரிக்கப்பட்டுள்ளதைப் போலவே, யாதொரு வேலையும் செய்ய மனதில்லாமல் செய்யாமல், வீண் அலுவற்காரராய், நடந்துகொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்களை கடிந்துகொண்டு புத்திசொல்லவேண்டும்.

b. திடனற்றவர்களைத் தேற்றுங்கள் (5:14)

கிறிஸ்தவ வாழ்க்கையில் பாடுகளினாலும், உபத்திரவத்தினாலும் இவர்கள் மிகவும் சோர்ந்துபோகிறவர்கள். இவர்கள், தங்களுடைய கஷ்டங்களை சகித்துக்கொண்டு, கிறிஸ்துவில் நிலைத்து நிற்குமாறு புத்திசொல்லவேண்டும்.

c. <u>பலவீனரைத் தாங்குங்கள் (5:14)</u>

விசுவாசத்தில் பலவீனமாக உள்ளவர்களை ஆவிக்குரிய ரீதியிலும், பொருளாதரத்தில் பலவீனமாக உள்ளவர்களை சரீர ரீதியாகவும் உதவவேண்டும். ஆவிக்குரிய உதவியை முக்கியமாக கருதி பொருளாதார உதவியை ஒதுக்கிவிடக் கூடாது. விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள் (ரோமர் 14:1). ஏனெனில் சிலர் உணவு மற்றும் நாட்களை கடைபிடிப்பதில் சில வரைமுறைகளோடு காணப்படுவார்கள் அப்படிப்பட்டவர்களை அற்பமாக எண்ணாதிருங்கள்.

d. <u>எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள் (5:14)</u>

மற்றவர்கள் எரிச்சலைத் தூண்டினாலும் நீடிய பொறுமையை காட்டுங்கள். மோசே தனது கோபத்தின் நிமித்தமாகத்தான் கானானுக்குள் செல்ல முடியாமல் போனது.

- ➢ நீடிய சாந்தமுள்ளவன் மகாபுத்திமான்; முற்கோபியோ புத்தியீனத்தை விளங்கப்பண்ணுகிறான் (நீதி 14:29).
- ➢ பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன் (நீதி 16:32)

e. <u>ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள் (வச.15 = ரோமர்12:17a)</u>

பொதுவாக கிறிஸ்தவர்களைப் பற்றி பேசும்போது, பழிவாங்கும் எண்ணத்தை பவுல் தடைசெய்கிறார் (5:15). வேலைநிறுத்தம் செய்வது, பதிலுக்கு பதில் செய்தல் ஆகியவை இயற்கையானதே, ஆனால் கிறிஸ்துவோடு நல்லுறவு வைத்திருக்கும் ஒரு விசுவாசி அதை செய்ய கூடாது.

f. <u>உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள் (5:15)</u>

தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்யவேண்டும் (எப்பொழுதும்). உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு (ரோமர் 12:20,21)

- இந்த காரியங்கள் அனைத்தும் நாம் மற்றவர்களுக்கு செய்பவை ஆகும்.

g. <u>எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் (வச.16 = ரோமர் 12:12a)</u>

எந்த சூழ்நிலையிலும் சந்தோஷமாய் இருப்பது என்பது ஒரு கிறிஸ்தவனின் அடையாளம் ஆகும். நல்ல காரியங்களில் (வேலை, பணம்) சந்தோஷமாய் இருக்கலாம். ஆனால் நமக்கு நேருடுகிற உபத்திரவத்தில் சந்தோஷமாய் இருக்கவேண்டும்.

- ➢ பவுல் சிறைச்சாலையில் இருக்கும்போது பிலிப்பியர் விசுவாசிகளுக்கு "சந்தோஷமாயிருங்கள்" என்று எழுதுகிறார் (பிலி 4:4)
- ➢ அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனார்கள் (அப் 5:41)
- ➢ அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிறகாலத்தின் சந்தோஷத்தைப்பார்க்கிலும், அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர். சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரைசெய்வேன் (சங்கீதம் 4:7,8)
- ➢ உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன் (3 யோவான் 4).
  - இன்றைக்கு பிள்ளைகள் உலக பிரகாரமாக உயர்ந்திருந்தால் சந்தோஷப்படும் பெற்றோர்கள்தான் அதிகம். நாம் எதில் சந்தோஷப்படுகிறோம்?

h. <u>இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் (வச.17 = ரோமர் 12:12c)</u>

நம்முடைய அன்றாட வேலைகளை விட்டுவிட்டு எப்பொழுதும் ஜெபத்திலேயே இருப்பதல்ல இதனுடைய அர்த்தம். தேவனோடு செலவு செய்வதர்க்கென்று தனிப்பட்ட ஒரு நேரத்தை வைத்துக்கொண்டு, அதை தொடர்ந்து கடைப்பிடிப்பதாகும்.

- ➢ தாவீது – அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன் (சங்கீதம் 55:17)
- ➢ தானியேல் – தான் முன் செய்துவந்தபடியே தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.

i. <u>எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது (5:18)</u>

- தேவமனுஷன் ஸ்பர்ஜன் இவ்வாறு கூறுகிறார்: சந்தோஷமும், ஜெபமும் திருமணம் செய்யும்போது அவர்களுக்கு பிறக்கும் முதல் குழந்தை 'நன்றி' என்பதாகும்.

எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள் என்பது வேறு – ஆண்டவர் உங்களுக்கு செய்த காரியங்களுக்காக. எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள் என்பது வேறு – இது ஆண்டவர் உங்களுக்கு அனுமதிக்கிற காரியங்களுக்கூடாக செல்லும்போது செய்யவேண்டியதாகும்.

- நாம் எப்பொழுது நன்றி செலுத்த தவறுகிறோமோ, அப்பொழுது தேவனை விட்டு விலக ஆரம்பிக்கிறோம்.

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28). இந்த மனப்பாங்கு இருக்கும் ஒரு விசுவாசி எல்லா காரியத்திற்கும் கர்த்தருக்கு நன்றி செலுத்துவான். யோபு இதற்கு ஒரு சிறந்த உதாரனமாக இருக்கிறான். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடையநாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான் (1:21).

j. <u>ஆவியை அவித்துப்போடாதிருங்கள் (வச.19 = ரோமர் 12:11b)</u>

ரெய்ரி கூறும்போது, "தனிப்பட்ட வாழ்விலோ அல்லது சபையிலோ ஆவியானவருடைய வேலையானது தடைபடும்போது அவரை நாம் செயல்பட விடாமல் தடை செய்கிறோம்" என்கிறார்.

அவிசுவாசி ஆவியானவருக்கு எதிர்த்து நிற்கலாம், அதில் அவர் துக்கப்படுவதில்லை, ஆனால் ஒரு விசுவாசி பாவம் செய்யும்போது அவரை துக்கப்படுத்துகிறான்.

நம் மத்தியில் செயல்படும் பரிசுத்த ஆவியை செயல்படாமல் இருப்பதாகும். பாவம், பாரம்பரியம், ஆராதனையில் மனிதன் உருவாக்கும் வழிமுறைகள், ஐக்கியம் இல்லாமை ஆகியவை பரிசுத்த ஆவியை செயல்படாமல் தடுக்கும்.

k. <u>தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள் (5:20)</u>

தீர்க்கதரிசனம் என்பது வரப்போகிற காரியங்களை முன்னறிவிப்பது மட்டுமல்ல, சொல்லப்பட்ட தேவனுடைய தீர்க்கதரிசனம் (அ) வார்த்தையை விளக்குவதும் தீர்க்கதரிசனமே. அது நமக்காக பாதுகாக்கப்பட்டு வேதாகமாக கொடுக்கப்பட்டுள்ளது. ஆக, வேதவார்த்தைகளை அற்பமாயெண்ணாதிருக்கவேண்டும். அதுபோல தேவவசனத்தை பிரசங்கிக்கிறவர்களும் வேதவசனத்தின் அடிப்படையில் பேசவேண்டும்.

l. <u>எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் (5:21)</u>

தீமைகள் கூட சில சமயங்களில் நன்மையாக தோன்றலாம். தவறான உபதேசங்கள் அதிகமாக எழும்பி நம்மை திசை திருப்பக்கூடும். வேதவசனத்தின் அடிப்படையில் எது சரி என்பதை சோதித்துப்பார்த்து அதை பிடித்துக்கொள்ளவேண்டும்.

நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார் (எபேசியர் 4:14,15). ஆகவே நாம் வளருவதற்கு ஆரோக்கியமான வசனங்கள் தேவை.

m. <u>பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் (5:22)</u>

சில காரியங்கள் நமக்கு சரியாக தோன்றலாம் ஆனால் அது பிறர் வாழ்க்கையை பாதிக்குமானால் அதை விட்டுவிலகுவது நல்லது.

<u>பரிசுத்தம் (5:23,24)</u>

பரிசுத்தம் என்பது பிரித்தெடுக்கப்படுதல் என்பதாகும். நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம்முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக என்று சொன்ன பவுல் நம்மை பரிசுத்தமாக்குவது முற்றிலும் தேவனுடைய செயல் என குறிப்பிடுகிறார். நமது ஆவி ஆத்துமா சரீரம் இம்மூன்றும் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. ஆகவே நமது சரீரங்களையும் பரிசுத்தமாய் பாதுகாக்கவேண்டியது நமது கடமை.

- பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார் (எபிரெயர் 10:14) – தேவன் நம்மை இரட்சித்து ஸ்தானத்தின் அடிப்படையில் நம்மை நிலைநிறுத்தியிருக்கிறார்.

- அதுமட்டுமல்ல அனுதினமும் நம்முடைய வாழ்வில் பரிசுத்தத்தை நடைமுறைபடுத்தவேண்டும். அதற்கு உதவியாக இருப்பது வேதவசனமே (யோவான் 17:17; சங்கீதம் 119:11)

<u>முடிவுரை (5:25–28)</u>

பவுல் தனக்காகவும், தன்னுடன் ஊழியத்தில் இணைந்துள்ள மற்றவர்களுக்காகவும் ஜெபிக்கும்படி விசுவாசிகளை கேட்டுக்கொள்கிறார் (வச.25). தேவனுடைய ஊழியத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக விசுவாசிகள் ஜெபிக்கவேண்டியது அவசியம், ஏனெனில் அவர்களும் எதோ ஒரு வகையில் தவறலாம். விசுவாசிகளின் ஜெபம் அவர்களை இன்னும் தேவனுடைய மகிமைக்காக பயன்பட வழிவகுக்கும்.

பவுல் தொடர்ந்து பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள் என்று கூறுகிறார் (வச.26). பவுலின் நாட்களில் வாழ்த்து தெரிவிக்க முத்தமிடுதல் ஒரு வழக்கமாக இருந்தது. கை குலுக்கி வாழ்த்து சொல்லுவது என்பது நமது வழக்கமாக இருக்கிறது. இங்கு பவுல் முத்தத்திற்கு அல்ல பரிசுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். கை கொடுத்தலோ (அ) முத்தமோ உள்ளான அன்பு இல்லாமல் செய்யும்போது அது யூதாஸ் கிறிஸ்துவுக்கு கொடுத்த முத்தத்தை போலத்தான் இருக்கும்.

இந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கப்படும்படி செய்யவேண்டுமென்று விரும்புகிறார் (வச.27).

திரும்பவுமாக பவுல் விசுவாசிகளை 'பரிசுத்த சகோதரர்' என்று குறிப்பிடுவதை காணலாம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக (வச.28).